திரு. எம். சுரேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாய கிராஜுடி சட்டத்தை கேரள அரசு நிறைவேற்றியிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? வேறு ஒரு ராஜ்யத்திலே இப்படிப்பட்ட சட்டத்தை நிறை வேற்றியிருக்கிறபோது, நம்முடைய ராஜ்யத்திலேயும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, கேரள அரசாங்கம் சென்ற ஆண்டில்—அவசரச் சட்டத்தின்மூலம்—ஆர்டினன்ஸ் பிறப்பித்தது. போனஸ் சட்டம் போன்று இந்தியா முழுமைக்கும் பொதுச் சட்டம் இருக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கமே ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் முதன்முதலிலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிலாளர் துறை மூலம் நாம் பல சட்டங்களை செய்திருக்கிறோம். 'ஷாப் அண்ட் எஸ்டாபிலிஷ் மென்ட்ஸ் ஆக்ட்' வருவதற்கு முன்னால் பத்து ஆண்டுகள் தொடர்ந்து பணி யாற்றியிருந்தாலும் பர்மனென்ட் இல்லையென்று சொல்லி அனுப்பிவிடலாம். அந்த ஆக்ட் கொண்டுவந்து அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறோம். இந்தியா முழுமைக்குமாக கிராஜுவடி சட்டம் கொண்டுவர வேண்டுமென்று மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை தொழிலாளர் மாநாட்டிலும் கேட்டுக் கொண்டேன். இதுகுறித்து இந்த மாநில அரசு மத்திய அரசை திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது. இந்தச் சட்டம் இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ விரைவிலே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Demonstration by employees of Small Engineering Units.

* 288 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the employees of the Small Engineering Units in Ambathur and Guindy demonstrated before the Office of the Tamil Nadu Small Service Industries Corporation in Madras City about 24th May 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: சென்னை அம்பத்தூரில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தைச் சேர்ந்த சில பிரிவுகளில் பணிபுரியும் சில தொழிலாளர்கள் மௌண்ட் சாலையில் உள்ள நிறுவனத்தின் மத்திய அலுவலகத்திற்கு 23—5—1970 அன்று ஊர்வலமாக வந்து அவர்களது பிரதி நிதிகள் கீழ்க் காணும் ஐந்து கோரிக்கைகள் அடங்கிய ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தனர்:—

1. மத்திய ஊதியக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துதல்.

2. கோரிக்கை 1 பற்றி எல்லா சங்கங்களிடமும் ஒரே சமயத்தில் பேச்சு வார்த்தை நடத்துதல்.

3. 1—3—1970 முதல் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 சிறப்பு ஈட்டுப்படியாக வழங்குதல்.

4. பிரிவுகளை மூடுவதற்கான யோசனையைக் கைவிடுதல்.

5. தொழிலாளர் வேலை நீக்கத்தை நிறுத்துதல்.

கோரிக்கைகள் 1-ம் 3-ம் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளன என்றும் எஞ்சியுள்ள மூன்று கோரிக்கைகள் ஆய்வுசெய்யப்படுமென்றும் நிறுவனத்தாரால் அறிவிக்கப்பட்டதும், தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின்கீழ் சுமார் 25 என்ஜினியரிங் யூனிட்டுகள் இருக்கின்றன. இதில் வேலை செய்பவர்களுக்கு சென்ட்ரல் வேஜ் போர்டு சட்டம் அமலாக்காமல் இருக்கிறது. அவர்கள் அன்றைக்கு ஆர்ப்பாட்டம் செய்ததாகத் தெரிகிறதே, அது சம்பந்தமாக அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அரசின் நிலை என்னவென்றால், தொழிலாளர்கள் வேஜ் போர்டின் சிபாரிசின்படி ஊதியம் பெற வேண்டுமென்பதுதான். தொழில்துறை மூலமாக தொழிலாளர்களும் நிறுவனமும் பேச்சுவார்த்தை நடத்தி சில செட்டில்மென்டுகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஒருசில நிறுவனங்களில் பேச்சுவார்த்தை முடிந்தும் இருக்கிறது. பேச்சுவார்த்தை நடக்காத நிறுவனங்கள் இருக்குமானால், தொழிற்சங்கத் தலைவர்களும், நிறுவனமும் கூடிப்பேசி தீர்த்துக்கொள்ளலாம். ஏதாவது கஷ்டங்கள் இருந்து என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், நானும் என்னுடைய துறையின் மூலமாக தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வழி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையினருக்கு ரயிலில் பிரயாணம் செய்ய இலவசப் பயணச் சீட்டுகள்

*259 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறையினருக்கு அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று வர இலவச ரயில் பாஸ் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, ராணுவத்தினருக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் காவல் துறையினருக்கும் அளிக்கப்படுவது நியாயம் என்பதை நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, அதைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றி எடுத்துச்சொல்லப்பட்டு, ஆனால், மத்திய அரசு அந்தச் சலுகைகளை ஏற்றுக்கொள்ள இயலாது என்று தெரிவித்திருக்கிறது.

Permission to rear cattle in police lines.

* 260 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal pending now before the Government to permit policemen to rear cows and buffaloes near their houses in the Police lines in Madras?